**இம்புல்பே பிரதேச சபையி - 2023**

-----------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இம்புல்பே பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயற்பாட்டு தொடற்பான கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய கூற்றுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இம்புல்பே பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு தரநியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்:

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள்,

பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றது எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்படுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகளானவை சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டு மொத்தம் ரூபா 305,010ஆன 02 அபிவிருத்தி செயற்திட்டங்கள் மற்றும் ஒலிக்கட்டுப்பாட்டு கட்டமைப்பு மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. அத்தோடு ரூபா 86,422 அட்டுறு செலவுகளும் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் வருடத்தின் இறுதி கணக்குகளின் ஊடாக சீர் செய்யப்படும். | சரியான முறையில் கணக்கிடப்பட வேண்டும். |
| (ஆ) | தவறான வரவு மற்றும் செலவு காரணமாக 2023 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு திரண்ட நிதியத்தின் மீதி ரூபா 54,278,046 ஆல் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | 2024 ஆம் வருடத்தின் இறுதி கணக்குகளின் ஊடாக சீர் செய்யப்படும். | சரியான முறையில் கணக்கிடப்பட வேண்டும். |
| (இ) | கணக்கீட்டு விடயம் 03 க்கு உரிய மீளாய்வாண்டின் இறுதியில் நிதி கூற்றின் பிரகாரம் நிதி மற்றும் | வேறுபாட்டினை அடையாளம் கண்டு சமப்படுத்துவதற்கு | வேறுபாடுகள் தீர்ப்பனவு செய்யப்பட |

| | | |
|---|---|---|
| பயன்பாட்டு ஆவணத்தின் பிரகாரம் ஆன மீதிகளுக்கு இடையில் ரூபா 1,943,164 வேறுபாடு உள்ளது. | நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டு மொத்தம் ரூபா 96,818,228 ஆன கணக்கீட்டு விடயங்கள் 03 க்கு விபரமான உப பதிவேடுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சமர்ப்பிக்கப்படும். | உப பதிவேடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கான இணக்கமின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 371(5) பிரகாரம் 2002 ஆம் வருடத்திலிருந்து 2020 ஆம் வருடம் வரை பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த ரூபா 4,630,332 ஆன 111 முற்பணங்கள் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | தகவல்கள் இல்லாத முற்பணங்களை பதிவழிப்பதற்கு மற்றும் ஏனைய முற்பணங்களை அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 10,680,873 தொகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 3,147,407 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன

செயளாலரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவள்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமான மூலம் | 2023 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலி டப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | 2022 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலி டப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 2,958,337 | 1,047,965 | 1,126,452 | 97,516 | 2,908,337 | 859,515 | 863,702 | 160,622 |
| வாடகை | 5,115,480 | 4,537,460 | 4,544,640 | 638,375 | 4,375,480 | 3,211,450 | 2,744,860 | 493,180 |
| உத்தரவுப் பத்திரக் கட்டணம் | 1,851,000 | 1,112,976 | 1,097,776 | 15,200 | 1,831,000 | 588,026 | 588,026 | - |
| ஏனைய வருமானம் | 8,200,000 | 8,644,414 | 10,239,619 | 7,168,690 | 12,706,800 | 10,008,078 | 52,318,480 | 8,721,859 |
| | 18,124,817 | 15,342,815 | 17,008,487 | 7,919,781 | 21,821,617 | 14,667,069 | 56,515,068 | 9,375,661 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 03 வருடங்களுக்கு அதிகமான பழைய நிலுவை ரூபா 72,358 வாடகை ஏக்கர் வரி மீதியொன்று காணப்படுகின்றது. | அறவிட முடியாத வரியை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. | வருமானங்கள் தாமதமின்றி அற விடப்பட வேண்டும். |
| (ஆ) | 2209 பாவணையாளர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட நீர் அருந்துவதற்கு பொருத்தமானதா என பரிசீலனைகள் மேற்கொள்ள ப்பட்டிருக்கவில்லை. பொருத்தப்பட்டுள்ள 145 நீர் மானிகள் செயலிழந்து காணப்படுவதுடன் 2024 மார்ச் 31 திகதியில் உள்ளவாறான ரூபா 5,316,619 நிலுவை நீர் கட்டணம் அறுவிடப்படுவதற்கு காணப்படுகிறது. | பரிசீலனைகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. செயலிழந்துள்ள மானிகள் திருத்தப்பட்டு வருகிறது. நிலுவைகளை அறவிட்டுக் கொள்வதற்கு நடமாடும் வேலை திட்டமொன்று மேற்கொள்ளுதல் மற்றும் நீர் இணைப்பை துண்டிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | உரிய பரிசீலனைகள மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் நிலுவை கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும். |
| (இ) | அபிவிருத்தி அடைந்துள்ளதாக 2018 ஆம் வருடத்திலே அடையாளம் காணப்பட்ட வலயங்களில் பதிவாகியுள்ள 783 குடும்ப அலகுகளிடமிருந்து வீத வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | வருமானங்கள் தாமதமின்றி அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பம்பஹின்ன வாராந்த சந்தைத் அபிவிருத்திக்காக 2017 ஆம் ஆண்டாகும் போது ரூபா 4,561,397 செலவிடப்பட்டிருந்த போதிலும் சந்தை நடைமுறைப்படுத்துவதற்கு பொருத்தமான வகையில் அபிவிருத்தி செய்யப்படாததன் காரணமாக செலவிடப்பட்ட பணம் விளைவற்று காணப்பட்டது. | ஏற்பாடுகள் கிடைக்க பெறாததன் காரணமாக அபிவிருத்தி நடவடிக்கைகளை இதுவரை மேற்கொள்ள முடியவில்லை. | செலவிடப்பட்ட பணத்துக்கு போதுமான பலன்கள் கிடைக்கப் பெற வேண்டும். |

### 3.2 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 02 முன்பள்ளி மாணவர்களிடமிருந்து 2022 மற்றும் 2023 ஆம் வருடங்களுக்காக அறவிடப்பட்ட ரூபா 800,000 ஆன கட்டணம் சபை நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு இருந்தபோதிலும், அந்த முன் பள்ளிகளின் நிர்வாகிகளுக்கு ரூபா 12,000 ஆக மாதாந்த கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்ததுடன், அனைத்து பராமரிப்பு நடவடிக்கைகளும் சபையின் ஊடாக நிறைவேற்றப்பட்டிருந்தது. | சபைக்கு போதுமான அளவு ஏற்பாடுகள் இல்லாததன் காரணமாக அதன் ஏனைய பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவது முன்பள்ளியினாலேயே ஆகும். அதற்காக பணம் அறவிடப்பட்டுள்ளதுடன் அது மாதாந்தம் அறவிடப்படுகின்ற அறவீடொன்றல்ல. | போலியான பதிலொன்றாகும். மாதாந்த கட்டணம் அறவிடப்படுகின்றது. பிள்ளைகளிடமிருந்து அறவிடப்படுகின்ற கட்டணம் சபை நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 05 ஒலிபரப்பு கோபுரங்களுக்காக 2021-2023 ஆகிய காலங்களில் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த தற்காலிக அனுமதியை நிரந்தரமாக்குவதற்கு இதுவரையும் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் நிறுவுதல் கட்டணம் ரூபா 376,000 குறைவாக அறவிடப்பட்டிருந்தது. | கடிதத்தின் மூலம் அந்த நிறுவனத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | அனுமதியை முறைமையாக்குவதற்கு மற்றும் நிலுவையாக உள்ள நிறுவுதல் கட்டணத்தை அறவிட்டுக் கொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | பெற்றுக் கொடுக்கப்பட்ட ரூபா 50,000 ஏற்பாடுகளை பிழையாக செலவிட்டதன் காரணமாக அந்த பணம் மாகாண சபையினால் மீளளிப்பு செய்யப்பட்டிருக்க வில்லை. | இது தொடர்பாக நிதி பிரமாணம் 104 பரிசீலனை ஒன்று மேற்கொள்ளுமாறு உள்ளூராட்சி ஆணையாளருக்கு வேண்டிக் கொள்ளப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.3 விளைவற்ற அல்லது குறை பயன்பாட்டு சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| புறநெகும செயற்திட்டத்தின் கீழ் ரூபா 42 மில்லியன் செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டு 2016 ஆம் வருடத்தில் சபைக்கு கையளிக்கப்பட்ட கலகம பல்நோக்கு கட்டிடம் மீளாய்வாண்டு இறுதியாகும் போதும் விளைவற்று காணப்படுகின்றது. | இந்த கட்டிடத்தை வருமானத்தை ஈட்டுகின்ற வழியொன்றாக ஈடுபடுத்துவதற்கு கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. | சொத்துக்கள் பாவனைக்கு உட்படுத்தப்படாமல் இருக்கக்கூடாது. |

## 3.4 ஒப்பந்த நிருவாகத்திலுள்ள குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தொழில்நுட்ப உத்தியோகத்தரின் அறிக்கையின் அடிப்படையில் 2014 ஆம் வருடத்தில் விளையாட்டு மைதானமொன்றின் அபிவிருத்திக்காக ரூபா 176,400 செலுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த அபிவிருத்தி நடவடிக்கைகள் முழுமையடையாததன் காரணமாக செலுத்தப்பட்ட பணத்தை மீளளிப்பு செய்ய முடியாதிருந்ததுடன் அந்தப் பணம் அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டதாக இம்புள்பே பிரதேச செயலாளரினால் 2023 மே மாதம் அறிவிக்கப்பட்டிருந்தது. | இதற்காக விசாரணை யொன்றை மேற்கொள்ளுமாறு இரத்தினபுரி மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | விசாரணை மேற்கொள்ளப்பட்டு பொறுப்புக்கள் நிச்சயிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சப்பிரகமுவ மாகாண சபையின் ஏற்பாட்டின் மூலம் மேற்கொள்ளப்பட்ட தொழிலொன்றிற்காக ரூபா 268,650 சபை நிதியத்தின் மூலம் முற்பணமாக செலுத்தப்பட்டிருந்த போதிலும், மீளாயவாண்டின் இறுதிவரையிலும் அந்த பணம் மீளளிப்பு செய்யப்பட்டு இருக்கவில்லை. | இதற்காக விசாரணை யொன்றை மேற்கொள்ளுமாறு இரத்தினபுரி மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | விசாரணை மேற்கொள்ளப்பட்டு பொறுப்புக்கள் நிச்சயிக்கப்பட வேண்டும். |

## 3.5 வாகனத் தொகுதியின் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திருத்த வேலை ஒன்றிற்காக 2021 ஆம் வருடத்தில் கையளிக்கப்பட்ட உழவு இயந்திரம் ஒன்று 2023 நவம்பர் மாதம் ஆகியும் எவ்வித திருத்த வேலைகளுக்கும் உட்படுத்தப்படாமல் அந்த வாகன தரிப்பிடத்தில் காணப்படுகின்றது. | இந்த உழவு இயந்திரம் திருத்த வேலைக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. எம்பிளிப்பிட்டிய நகர சபைக்கு பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கைகள் ஏற்பாடாகியுள்ளது. | சொத்துக்கள் பாவனைக்குட்படுத்தப்படாமல் இருக்கக் கூடாது. |